[1984 பிப்ரவரி 22

திரு. சா. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியப் பகுதிகளில் விளையாட்டுப் பயிற்சிகளைத் துரிதப்படுத்த ஸ்டேடியம் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டும், இன்னும் ஸ்டேடியம் அங்கே அமைக்கப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அடுத்து, விளையாட்டுத் துறையில் ஆர்வம் செலுத்தி வருகின்ற அரசு, ஒன்றியத்திற்சாக தனி நிதி ஒதுக்கி, பொங்கல், தீபாவளி போன்ற நன்னாட்களில் கிராமங்களில் விளையாட்டு விழாக்களை நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் விளையாட்டு போட்டிகள் நடத்த வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கம். ஆனால், கிராமங்களில் நாம் நடத்துகின்றபோது, அதற்குத் தகுந்த போதுமான அளவிற்கு விளையாட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இப்போது இருக்கின்ற நிலையில், அரசு இதிலே முன்முயற்சி எடுத்துக்கொண்டாலும், ஒன்றியத்தில் ஒன்றிரண்டு விளையாட்டு மையங்கள்கூட வரவில்லை. அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன் ; போதுமான ஆர்வம் மக்களிடத்திலே இல்லை என்பதுதான். இரண்டாவது, அப்படி ஆரம்பிக்கப்பட்ட மையங்கள் நம் நோக்கத்திற்கு ஏற்ப செயல்படவில்லை. அதற்கு மாறாக, அங்குள்ள விளையாட்டு மையங்கள் பொழுது போக்கு மன்றங்களாக மாறிக் கொண்டு வருகின்றன. விளையாட்டில் இளைஞர்களுக்கு பயிற்சி தரக்கூடிய மையங்களாக இருக்க வேண்டும் என்பது நம் நோக்கம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், இன்றைக்கு பொழுதுபோக்கு, மன்றங்களாக மாறிவருகின்ற வேதனைகளை நாம் பார்த்து வருகிறோம். இதைத் தடுத்து நிறுத்தி, விளையாட்டுப் பயிற்சி தருகின்ற மையங்களாக அந்த மையங்கள் செயல்படுவதற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் போன்ற மக்களிடத்திலே செல்வாக்கு உள்ளவர்கள் இதிலே கொஞ்சம் ஆர்வம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வெள்ள பொட்டல் கிராமம் அருகேயுள்ள கண்மாய்க் கரையைப் பழுது பார்க்கும் திட்டம்.

(*119—வினா எண் 14192)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி **வத்திரா** இருப்பு ஒன்றியம் வெள்ளபொட்டல் கிராமம் அருகே உள்ள பஞ்சாயத்து யூனியன் கண்மாய் புயல், வெள்ளத்தால் 1977 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டு கண்மாய்க்கரை உடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது பழுது பார்க்கப்படும் ?

1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கண்மாய் மராமத்து மற்றும் கலிங்கு கட்டுவதற்காக அரசு ரூ. 4.10 இலட்சம் அனுமதியளித்திருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு வெள்ளம் வந்து இந்தக் கண்மாயினுடைய கலிங்கு, மற்றும் கரை எல்லாம் உடைத்துச் செல்லப்பட்டது. உள்ளாட்சித்துறை அதிகாரிகளிடம் இதைப் பராமரிக்க வேண்டுமென்று சொன்னபொழுது, இது பொதுப்பணித்துறை கண்மாய் என்று சொல்கிறார்கள். பொதுப் பணித்துறை அதிகாரிகளிடம் சொல்லியபொழுது, இது உள்ளாட்சித்துறை கண்மாய் என்று சொல்கிறார்கள். இப்படி 8 வருஷமாக இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் நான் முறையிட்டிருக்கிறேன. ஆதலால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வருங்காலத்திலாவது இந்தத் தவறுகள் நடவாதவண்ணம், இனிமேல் ஏதாவது சேதம் அடைந்தால், உடனடியாக மராமத்து பார்க்க வேண்டிய காரியங்களைச் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் சார்பிலும், பொதுப் பணித்துறையின் சார்பிலும் பல்வேறு கண்மாய்கள் மராமத்து செய்யப்படுகின்றன. 110 ஏக்கர்களுக்கு மேலே பாசன வசதி அளிக்கக்கூடிய கண்மாய்களாக இருந்தால் அவை பொதுப்பணித்துறையின் சார்பிலும், 100 ஏக்கர்களுக்குக் குறைவாக பாசன வசதி அளிக்கக்கூடிய கண்மாய்களாக இருந்தால் அவை ஊராட்சி ஒன்றியங்களின் சார்பிலும் பராமரிக்கப்படுகின்றன. இந்தக் குறிப்பிட்ட கண்மாய் 76 ஏக்கர் பாசன வசதி அளிக்கக்கூடியது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் சார்பிலே பராமரிப்பு செய்யப்பட வேண்டுமென்று அரசாணையிடப்பட்டு, 1983 ஆம் ஆண்டிலே ரூ. 4.10 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உரிய காலத்திலே வேலைகள் சீக்கிரமாக நடத்தப்படும்.

தகட்டூரில் பணியார் விடுதி கட்ட வேண்டுமென்பதற்கான கோரிக்கை.

(*120—வினா 17020—திரு.எம்.எஸ். மாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் தாலூகா தகட்டூரில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பயணியர் விடுதிக் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விரைவில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?